# நியாயத்தீர்ப்பு நாள்

## The Judgement Day

***பின் வருவனவற்றை நீங்கள் அறிவீர்களா?***

☞ *நியாயத்தீர்ப்பு நாள் என்னும் நினைவும் கூட மக்கள் பலருக்குப் பயத்தையும் திகிலையும் உண்டாக்குகின்றது; ஏனெனில், அது 24 மணி நேரமுள்ள நாள் என்னும் தவறான போதனையை அவர்கள் உட்கொண்டிருக்கிறார்கள். மேலும் அந்நாளில் மாபெரும் பயங்கரமான நிகழ்ச்சகள் நடைபெறும் என்றும், கோடானுகோடி மக்களை அவர்கள் மரணமடைந்த நேரத்தில் அவர்களுடைய ஆத்துமாக்கள் அடைந்த பரலோகத்திலிருந்தும் நரக லோகத்திலிருந்தும் கிறிஸ்து கூவி அழைத்து, அந்நாளில் உயிரடையும் அவர்களுடைய பழைய சரீரங்களுக்குள் புகுத்தித் தீர்ப்புக் கூறி, பரலோகத்திலிருந்து வந்த சொற்பப் பேரானவர்களை மறுபடியும் பரலோக சந்தோஷங்களை நித்திய காலமாய் அனுபவிக்கும்படி அவ்விடத்துக்கே அனுப்புவார் என்றும், நரக வேதனையிலிருந்து வந்த மிகப் பெரும்பான்மையான மக்களை நெருப்பில் வேகாத இயல்புள்ள பிசாசுகளால் நித்திய நரக வேதனையை அனுபவிக்க மறுபடியும் அவ்விடத்துக்கே அனுப்புவார் என்றும், கிறிஸ்தவர்களில் ஏராளமானவர்கள் எண்ணுகிறார்கள். இதற்கு இசைவாகவே நியாயத்தீர்ப்பு நாள் என்பது தீர்ப்புக்கூறும் நாள் என்றும், ஆக்கினைத்தீர்ப்பு நாள் என்றும் சொல்லுகிறார்கள்.*

☞ *இருண்ட யுகங்களில் தோன்றின இந்த அபிப்பிராயங்கள் நியாயத்தீர்ப்பு நாளையும் அதைப்பற்றிய வேத போதனைகளையும் முற்றிலும் வியர்த்தமும், அபத்தமும் ஆக்குகின்றன.*

☞ *ஆதாமின் கீழ்ப்படியாமையினால் தேவன் அவனை (அவன் அரையிலுள்ள மனுக்குலத்துடன்) மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்; ஆனால் அவர் தமது பேரன்பினால் தமது குமாரனை "மாம்சமாகும்படி" மனுஷனாகும்படி - மரணத்தை அனுபவிப்பதற்காக அவரைத் தேவ தூதரிலும் சற்றுச் சிறியவராகும்படி செய்தார்; ஏனெனில் அவர் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்க்க வேண்டும் :- ஆதி. 2 : 17; 3 : 17-19; ரோம. 5 : 6-19; மத். 20 : 28; யோவா. 1 : 14; 3 : 14-18; எபி. 2 : 9 - ஆங்கில வேதாகமம் காண்க.*

☞ *எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் இந்த நற்செய்தி, ஏற்ற காலங்களில் விளங்கும்படி, எல்லா மனிதருக்கும் உரிய மீட்கும் பொருளாகிய இயேசுவையே முழுவதும் சார்ந்திருக்கிறது. இது சிலர் இந்த ஜீவியத்திலும், மீதியானவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட பின்பும் (யோவா. 5 : 28, 29 - ஆங்கில புதுத்திருப்புதல் காண்க - ஆக்கினையை என்ற வார்த்தைக்குப் பதிலாக, "நியாயத்தீர்ப்பை" என்ற வார்த்தையை உபயோகித்து வாசிக்க).*

☞ *நித்திய ஜீவனை அடைவதற்குரிய நிறைவானதும் சிறந்ததுமான ஒரே ஒரு அவகாசம் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது; ஏனெனில், எல்லா மனுஷரும் (ஆதாமின் பாவத்தினாலுண்டான ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து) இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராய் இருக்கிறார்." (லூக். 2 : 10; 1 தீமோ. 2 : 3-6; 4 : 10) ஆதாமின் சந்ததியில் எவருக்காவது இரட்சிக்கப்படுவதற்கு இரண்டாவது அவகாசம் தவணை கிடையாது. முதற் பேறானவர்களின் சபை தெரிந்தெடுக்கப்படும் காலமாகிய சுவிசேஷ யுகத்தில் - சபைக்குரிய நியாயத்தீர்ப்பு நாளில் - அவர்களுக்குள் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களும், (எபி. 12 : 23; அப். 15 : 14; எபி. 6 : 4-6; 10 : 26-31) உலக நியாயத்தீர்ப்பின் நாளாகிய ஆயிர வருஷ காலத்தில் - உலகம் இரட்சிக்கப்படும் காலத்தில் - சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களும் இரண்டாம் மரணமாகிய நித்திய அழிவை அடைவார்கள்.*

☞ *நியாயத்தீர்ப்பு நாள் 24 மணி நேரமுள்ள நாள் அல்ல; அது ஆயிரம் வருஷங்கள் கொண்ட நாள். ஏனெனில், **(1)** நியாயத்தீர்ப்பின் நாளின் காலத்தில் செய்யப்பட வேண்டிய வேலை 24 மணி நேரத்தில்*

செய்யப்படுவது கூடாத காரியம். **(2)** நாள் என்னும் சொல், "லுத்தரின் நாள்" என்பது போல சாதாரண வழக்கத்திலும், வேதாகம வழக்க நடையிலும் 24 மணி நேரத்தைப் பார்க்கிலும் மிகவும் நீண்ட காலத்தைக் காண்பிக்குமாறு உபயோகிக்கப்படுகிறது. உதாரணமாக - முழுச் சிருஷ்டிப்பின் காலம் (ஆதி. 2 : 4), இஸ்ரவேலர் வனாந்தரத்தில இருந்த 40 வருஷங்கள் (சங். 95 : 7-10; எபி. 3 : 8, 9), யூத யுகம் (ஏசா. 65 : 2; ரோம. 10 : 21), சுவிசேஷயுகம் (2 கொரி. 6 : 2; எபி. 3 : 13, 15; எபி. 1 : 1, 2), சுவிசேஷ யுகத்தின் முடிவில் வரும் நீதி சரிகட்டும் - கோபத்தின் - உக்கிரத்தின் - கோபாக்கினையின் - காலம் (ஏசா. 61 : 2; சங். 110 : 5; செப். 1 : 14-18; வெளி. 6 : 17). ஆயிர வருஷ யுகம் (ஏசா. 11 : 10; 25 : 9 - அந்நாளிலே - ஆங்கில வேதாகமம் காண்க), முதலியவைகளைக் கவனித்து அறிக; **(3)** நியாயத்தீர்ப்பின் நாளும், ஆயிர வருஷ யுகமும் (வெளி. 20 : 4-6) ஒரே காலமேயாகும். அதாவது, நியாயத்தீர்ப்பின் நாளே ஆயர வருஷ யுகமாகும். (2 தீமோ. 4 : 1; லூக். 22 : 29, 30; மத். 19 : 28; ஒபதி. 21; எரே. 23 : 5, 6; 33 : 14-16; ஏசா. 32 : 1; சங். 72 : 1-4). இக்காரணங்களினால் நியாயத்தீர்ப்புநாள் 24 மணி நேரமுள்ள ஒரு நாளாயிராமல், ஆயிரம் வருஷங்களாய் இருக்கிறது என நாம் அறிகிறோம்.

☞ சுவிசேஷ யுகம் - அதில் தெரிந்தெடுக்கப்படும் சபைக்குரிய நியாயத்தீர்ப்பு நாள் (2 தெச. 1 : 4, 5; 1 பேது. 4 : 17); ஆகிலும் தேவன், "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" - "தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் ........ கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை அறியாதிருக்க வேண்டாம் - மறந்துவிட வேண்டாம். (தமிழ் புதுத்திருப்புதல் காண்க). அப். 17 : 31; 2 பேது. 3 : 7, 8; சங். 90 : 4.

☞ "இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய" சாத்தான் பெரும்பான்மை மக்களின் மனதை அநேக நூற்றாண்டுகளாகக் குருடாக்கியிருக்கிறான். (2 கொரி. 4 : 4). இருள் பூமியையும் "காரிருள் ஜனங்களையும்" மூடியிருக்கிறது. (ஏசா. 60 : 2); ஆனால் பூலோகத்தின் மகா பெரிய நியாயத்தீர்ப்பு நாளில், "அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அவன் ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு" கட்டிவைக்கப்படுகிறான். - வெளி. 10 : 2, 3, 7.

☞ கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆளுகை நடைபெறும் "அந்த நாளிலே" அவர் மனுக்குலத்தை நியாயந்தீர்க்கிறபொழுது, "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." "அக்காலத்திலே (அந்நாளிலே) இதோ, இவரே நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம். இவர் நம்மை இரட்சிப்பார் ........ இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." - ஏசா. 11 : 9, 10; 25 : 6-9; 40 : 5; 52 : 10; எரே. 31 : 34; ஆபகூ. 2 : 14.

☞ நியாயந்தீர்த்தல் என்னும் சொல் வேதாகமத்தில் வழங்கியுள்ள முறையில் தீர்ப்புச் சொல்லுதல் மட்டுமே அதற்குப் பொருள் அன்று. அது நான்கு முக்கியமான பொருளில் கையாளப்படுகின்றது. அவையாவன : **(1)** போதித்தல் (சங். 19 : 7 11; 25 : 8, 9; 106 : 3; 119 : 108; ஏசா. 33 : 5; 56 : 1; 59 : 4, 8-15; எசே. 22 : 2; மத். 12 : 18-20; 23 : 23; கொலோ. 2 : 16). **(2)** பரீட்சித்துப் பார்த்தல் (சங். 26 : 1-3; 139 : 23, 24 - ஐ ஒப்பிட்டுப்பார்; எரே. 11 : 20; 20 : 12-ஐ ஒப்பிட்டுப்பார்; 2 தெச. 1 : 4, 5). **(3)** சீர்திருத்துகிறதற்காகச் சிட்சித்தல். (ஏசா. 26 : 9; 1 கொரி. 11 : 31, 32; லூக். 12 : 47, 48-ஐ ஒப்பிட்டுப்பார்; எபி. 12 : 5-11; வெளி. 3 : 19). **(4)** தீர்ப்பு அளித்தல் (மத். 7 : 1, 2; யோவா. 7 : 24; உபா. 1 : 16; சங். 17 : 2) என்பவைகளே. ஆகவே நியாயத்தீர்ப்பு நாள் என்பது போதித்துப் பரீட்சித்துச் சிட்சித்து முடிவான தீர்ப்பளிக்கும் நாள் என்று பொருள்படும்.

☞ இந்த நான்குவகை முறையினாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிருள்ளோரை (புது சிருஷ்டிகளாகிய சிறு மந்தையையும் திரள் கூட்டத்தாரையும், கெட்டுப்போன தூதர்களையும்) அவருடைய எபிபனிக் காலத்திலும் (அவர் வெளிப்படும் காலத்திலும்), மரித்தோரை (மனுக்குலம் முழுவதையும்) அவருடைய ராஜ்ய காலத்திலும் நியாயந்தீர்ப்பார் (போதித்துப் பரீட்சித்துச் சிட்சித்துப் பைசல் பண்ணுவார். 2 தீமோ. 4 : 1- ஆங்கில வேதாகமம் காண்க); அவருடைய ஆயிர வருஷ அரசாட்சியில்,

"எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டும்; பரிகரிக்கப்படும் (அழிக்கப்படும்) கடைசி சத்துரு மரணம். (ஆதாமின் பாவத்தினாலுண்டான சாகும் முறைமை)" - 1 கொரி. 15 : 24-26; சங். 72 : 1-4 ஏசா. 11 : 1-6: 32 : 1; எரே. 23 : 5, 6; ஓசி. 13 : 14; வெளி. 20 : 11-15.

☞ கிறிஸ்துவின் மணவாட்டியும் உடன் சுதந்திரவாளியுமாகிய மெய்யான சபையானது ஆயிர வருஷ நியாயத்தீர்ப்பு நாளில் அவரோடு கூடப் பூமியில் ஆளுகை செய்து, "ஜீவ தண்ணீரை இலவசமாய் மனுக்குலத்துக்குக் கொடுத்து," நியாயத்தீர்ப்புச் செய்யும் வேலையில் கிறிஸ்துவுக்கு உதவி புரிவார்கள். - 1 கொரி. 6 : 2; ஓப. 21; மத். 19 : 28; லூக். 22 : 29, 30; ரோம. 8 : 16-21; 2 தீமோ. 2 : 11, 12; வெளி. 3 : 21; 5 : 9, 10; 20 : 4, 6; 22 : 17.

☞ தேவன் தம்முடைய பேரில் ஆணையிட்டு உறுதிப்படுத்திய வாக்குத்தத்தத்தின்படியே ஆபிரகாமின் சந்ததி, அதாவது கிறிஸ்துவும் சபையும் "பூமியிலுள்ள சகல வம்சங்களையும்" ஆசீர்வதிப்பார்கள். இது அவர்களுடைய ஆயிர வருஷ அரசாட்சிக் காலத்தில் நடைபெறும். - ஆதி. 12 : 3; 22 :16-18; கலா. 3 : 7-9, 16, 29; எபி. 6 : 13 20; அப். 3 : 19-25.

☞ இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள், தேவனுடைய ராஜ்ய ஸ்தாபக சமயத்தில் பூமியில் உயிரோடிருக்கிறவர்களும், கடந்த காலங்களில் ஆதாம் முதல் மரித்துப்போன யாவருமேயாவர்; மரித்தோர் தங்கள் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பெற்று (சங். 6 : 5; 146 : 4; தானி. 12 : 2; யோவா. 5 : 28, 29- ஆங்கில புதுத் திருப்புதல் காண்க; யோவா. 11 : 11-14; 1 தெச. 4 : 14; 2 பேது. 3 : 4). அதன் பின்பு சத்தியத்தை அறியும், திட்டமும் பூரணமுமான அறிவையும், நித்திய ஜீவனைச் சம்பாதித்துக் கொள்வதற்குரிய ஒரு பரிபூரண அவகாசத்தையும் வசதியையும் அடைந்து கொள்வார்கள்.

☞ இறுதியில், "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை; அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் - சாத்தானுடைய ஆளுகையில் இருந்தவை - பாவத்தாலுண்டான சாபம் மரணம் முதலியவைகள் - ஒழிந்துபோயின." - வெளி. 21 : 1-4; 22 : 1-3; ஏசா. 35 : 10; 65 : 17-25.

☞ "மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் ...... தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்; அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். (அந்த மகாபெரிய நியாயத்தீர்ப்பு நாளில் நடைபெறும் பரீட்சைகளின் மூலமாய்) மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களை பிரிப்பார்." செம்மறியாடுகள் நற்குணமுடையவர்களுக்கு அடையாளம். அவர்கள் இப்பூமியிலேயே நித்திய ஜீவனைப் பெற்று "ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்." (சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். - மத். 5 : 5). வெள்ளாடுகளை அடையாளமாகக் கொண்டு நித்திய ஜீவனை அடையப் பாத்திரவான்களாகத் தங்களை மெய்ப்பித்துக் காண்பிக்காதவர்களோ, நித்திய ஆக்கினையை **(Greek - Kolasin - cutting off)** - அறுப்புண்டு போகுதலை - மரணத்தை, அதாவது இரண்டாம் மரணத்தை, மீண்டும் ஒருக்காலும் உயிர்பெறக் கூடாத நிலைமையை - அடைவார்கள். "அவர் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்;" அவர்கள் ஒருக்காலும் இல்லாதவர்கள் போல் ஆகிவிடுவார்கள். - மத். 25 : 31-46; சங். 145 : 20; ஓப. 16; மத். 10 : 28; 2 பேது. 2 : 1, 12; யூதா 12.

☞ துன்மார்க்கரை அழிப்பதையே "அக்கினிக் கடலில்" தள்ளப்படுதல் (வெளி. 20 : 15) அல்லது பங்கடைதல் (வெளி. 21 : 8) என்றும், நித்திய அக்கினியில் போடுதல் (மத். 25 : 41) என்றும் உருவக முறையில் சொல்லியிருக்கிறது. மத். 25 : 41-ல் "நித்திய அக்கினி" என்று சொன்ன நமது கர்த்தராகிய இயேசுவே, வெளி. 20 : 14, 15; 21 : 8 முதலிய வாக்கியங்களில் "அக்கினிக்கடல்" என்ற வாசகத்தை உபயோகித்திருக்கிறார். ஆகவே இரு வாசகங்களும் ஒரே கருத்தையுடையதாய் இருக்க வேண்டும். அக்கினிக் கடலுக்குள் போடப்படு எரிபொருள்கள் அனைத்தையும் அது அழித்துப்போடுகிறபடியால், அக்கினி வேத புத்தகத்தில்

அழிவுக்குத் தகுதியான அறிகுறியான வார்த்தையாக வழங்குகிறது. (மல். 4 : 1; எபி. 10 : 29; மத். 3 : 10-13; செப். 3 : 8, 9; ரோம. 12 : 20). "அக்கினிக் கடல் இரண்டாம் மரணமாகிய நித்திய அழிவைக்" குறித்துக் காட்டுகிறதென நமது கர்த்தராகிய இயேசுவே விளக்கிக் கூறியிருக்கிறார். (வெளி. 20 : 14; 21 : 8 - உடன் 2 தெச. 1 : 10-ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும்); அப்படியே, அக்கினி, அழிவுக்கு அறிகுறியான வார்த்தையாக வழங்குகிறபடியாலும், எபி. 2 : 14; எசே. 18 : 19-ல் யாதொரு அறிகுறியுமில்லாமல் பிசாசு அழிக்கப்பட்டுப் போவான் என்று தெளிவாய்ச் சொல்லப்படுகிறபடியாலும், மத். 25 : 41-ல் சொல்லப்படுகிற, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் (வெளி. 20 : 15; 21 : 8) ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி என்பது நித்திய அழிவையே குறிக்கிறது.

☞ "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்; "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்;" அதனால், இறுதியில், "அந்த தீர்க்கதரிசியின் (கிறிஸ்துவின்) சொற்கேளாதவன் (ஒவ்வொரு ஆத்துமாவும் - ஆங்கில வேதாகமம் காண்க) ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்படுவான்." அழிக்கப்படுவான். - ரோம. 6 : 21, 23; யோவா. 3 : 36; 1 யோவா. 5 : 12; சங். 37 : 38; எசே. 18 : 4, 20; அப். 3 : 19-23.

☞ உலக நியாயத்தீர்ப்பு நாள் என்பது ஆக்கினைத்தீர்ப்பு நாள் அல்ல, அது இரட்சண்ய நாள். அதனால் அந்த நாள் நெருங்கி வருகிறதை நாம் கண்டு சந்தோஷப்பட்டுக் களிகூரவேண்டும் என்றும் வேத புத்தகம் நமக்குத் தெரிவிக்கிறது. - "வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக ............ ஏனெனில் அவர் (தேவன்) வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைத் தமது சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்;" "பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காணும்;" "பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்கு (தேவனுக்கு) பயந்திருக்கும்" - வியந்து நன்கு மதித்துக் கனம் பண்ணும் - சங். 96 : 98; 67; ஏசா. 26 : 9; எண். 14 : 21.

☞ இச்சிறு கையேட்டில் அடங்கிய வேத போதனைகளை இன்னும் அதிகத் தெளிவாகவும் விவரமாகவும் அறிய விரும்புகிறவர்கள், "யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு" என்னும் புத்தகத்தை வாசித்தறிந்து கொள்ளலாம்.

*****


*Courtesy by :* LAYMEN'S HOME MISSIONARY MOVEMENT

1156, St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A.



***For English & Tamil Magazines, Books, Tracts, Booklets Contact :***

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent@biblestandardindia.com



**FOR PRIVATE CIRCULATION ONLY**